SG:DIGITAL





# நான் மின்னிலக்கமயமாகிறேன்!



## மூத்தோருக்கான மின்னிலக்கமயமாதல் திட்டத்தின் நடவடிக்கை தொகுப்பு 2

**(மின்கட்டணமுறை, மொபைல் வங்கிச்சேவை, இணையப் பாதுகாப்பு)**

எங்களது மின்னிலக்கத் தூதர்களின் உதவியுடன் மின்னிலக்கத் திறன்களைக் கற்றுக்கொண்டு, எங்கள் விளையாட்டு அட்டையுடன் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டறிந்திடுங்கள். இணையம்வழி விரிவாகக் கற்றுக்கொண்டு, பல்வேறு திட்டங்களில் பங்குபெறுங்கள்.

**PayNow • SGQR • DBS digibank • DBS PayLah! • OCBC Mobile Banking OCBC Pay Anyone™ • UOB Mighty • Singtel Dash • GrabPay • GrabFood WhyQ • FairPrice Scan & Go • Carousell • Fave • meREWARDS Personal Data • Staying Safe Online • Spot Scams**

## மேல்விவரம் அறிந்திடுங்கள்

sdo.gov.sg

6377 3800

INFO@imda.gov.sg

மின்னிலக்கமயமாகி வெல்லுங்கள்!

# மின்னிலக்கத்துடன் இணைந்திட உங்களை வரவேற்கிறோம்.

இந்த அட்டைப்பலகை விளையாட்டைப் பூர்த்தி செய்து, மின்னிலக்க வாழ்க்கையைத் தொடங்கிவிடுங்கள்!

உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், கவலை வேண்டாம்! தேர்ந்தெடுக்கப்பட்ட பொது நூலகங்களில் அல்லது சமூக மன்றங்களில் இருக்கும் எங்களது மின்னிலக்கத் தூதர்களை அணுகுங்கள். உங்களது கற்றல் பயணத்திற்கு அவர்கள் உதவி செய்வார்கள். எனவே, இந்த நடவடிக்கை தொகுப்பைக் கையோடு வைத்திருந்து, மின்னிலக்கப் பயணத்தை மகிழ்ச்சியாக மேற்கொள்ளுங்கள்!

## ஆரம்பி

உங்கள் மின்னிலக்கப் பயணத்தை இங்கே தொடங்குங்கள்

## நிலை 1

- வாசக அல்லது குரல்பதிவு தகவல்கள் அனுப்புங்கள்
- குரல் அல்லது காணொளி அழைப்புகள் செய்யுங்கள்
- உடனுக்குடன் தகவல் அறிய அரசாங்கத்தின் வாட்ஸ்ஆப் சேவைக்குப் பதிவு செய்யுங்கள்
- பகிரலைப் பகுதிகளில் கம்பியில்லா இணைய வசதியுடன் இணையுங்கள்
- காணொளி சந்திப்புடன் இணைய கற்றுக் கொள்ளுங்கள்
- SafeEntry நுழைவுப் பதிவுக்காக விரைவுத் தகவல் (QR) குறியீட்டை வருட கற்றுக் கொள்ளுங்கள்
- மின்னஞ்சல் கணக்கை அமைக்க கற்றுக் கொள்ளுங்கள்

## நிலை 2

- SafeEntry நுழைவுப்பதிவு செய்ய சிங்பாஸ் மொபைல் செயலியை அமைத்து புகுபதிவு செய்யுங்கள்
- ஒரு நண்பரைப் பரிந்துரை செய்யுங்கள்
- ஃபிஷிங் தொடர்பான பாதுகாப்புக் குறிப்பைப் பகிருங்கள் (எ.கா. சரிபார்க்காத இணைப்புகளைத் திறக்காதீர்கள்)
- TraceTogether பயன்படுத்த கற்றுக் கொள்ளுங்கள்
- NLB Mobile செயலியை அமைத்திடுங்கள்
- LifeSG செயலியை அமைத்து புகுபதிவு செய்யுங்கள்
- வலுவான இணைய மறைச் சொற்களை அமைக்க கற்றுக் கொள்ளுங்கள்
- சிங்பாஸ் மொபைல் செயலிக்கு SMS 2FA (இரட்டை மறைச்சொல் உறுதிப்பாடு) பதிவு செய்ய கற்றுக் கொள்ளுங்கள்
- ஒரு நண்பரைப் பரிந்துரை செய்யுங்கள்

## நிலை 3

- நீங்கள் விரும்பும் டிஜிபேங்க் செயலியைப் பதிவிறக்கம் செய்யுங்கள்
- உங்களது PayNow சேவையை அமைத்திடுங்கள்
- நீங்கள் விரும்பும் மொபைல் கட்டணமுறை செயலியில் SGQR மூலம் பணம் செலுத்த கற்றுக் கொள்ளுங்கள்
- உங்களுக்குப் பிடித்த கற்றல் பயணத்திற்குப் பதிவு செய்யுங்கள்
- ஒரு நண்பரைப் பரிந்துரை செய்யுங்கள்

எங்களது அறிமுகக் காணொளியைக் காண இப்போதே விரைவுத் தகவல் (QR) குறியீட்டை வருடுங்கள்.

இணையம்வழி இன்னும் பல திறன்களைக் கற்றுக்கொள்ள இங்கே வருடுங்கள்

இந்த நடவடிக்கை தொகுப்பையும் பயன்பாட்டு வழிமுறைகளையும் மின்பதிப்பு வடிவில் பெறுவதற்கு விரைவுத் தகவல் (QR) குறியீட்டை வருடுங்கள்

# SG Digital

## PayNow பயன்பாட்டு வழிமுறைகள்

## உங்களுக்குத் தெரியுமா?

PayNow மூலம், உங்கள் கைப்பேசி எண் அல்லது சிங்கப்பூர் NRIC/FIN எண்ணைப் பயன்படுத்தி, சிங்கப்பூரில் ஒரு வங்கியிலிருந்து மற்றொரு வங்கிக்கு, சிங்கப்பூர் வெள்ளியில் பணத்தை உடனுக்குடன் அனுப்பவும் பெறவும் முடியும் என்பது உங்களுக்குத் தெரியுமா?

## படிநிலை 1 நீங்கள் விரும்பும் வங்கிச் செயலியை உங்கள் கைப்பேசியில் நிறுவுங்கள்


**ஆப்பிள் ஆப் ஸ்டோர்** அல்லது **கூகல் பிளே ஸ்டோர்** சென்று, PayNow திட்டத்தின்கீழ் ஆதரிக்கப்படும் வங்கிச் செயலிகளில் ஏதாவது ஒன்றைப் பதிவிறக்கம் செய்து, அதனைச் செயற்படுத்துங்கள்.

PayNow கட்டணமுறையை ஆதரிக்கும் பங்குபெறும் வங்கிகளின் எடுத்துக்காட்டுகள்


PayNow-ஐ அமைப்பதற்கு முன் உங்கள் வங்கிக் கணக்கிற்கான இணைய வங்கிச் சேவையை நிறுவி செயற்படுத்தவேண்டும்.

அருகிலுள்ள வங்கிக் கிளையின் சேவை முகப்பில் உதவி கிடைக்கும் (தேவைப்பட்டால்).


## படிநிலை 2 உங்கள் வங்கிக் கணக்குடன் PayNow-ஐ இணைத்திடுங்கள்




1. நீங்கள் தேர்ந்தெடுத்த வங்கிச் செயலியைச் செயற்படுத்தி, உங்கள் கைப்பேசி எண் மற்றும்/ அல்லது சிங்கப்பூர் NRIC/FIN எண்ணை அதில் இணைத்திடுங்கள்.




2. PayNow-இல் உங்களை மற்றவர்கள் அனைடாயள் காண உதவியாக, உங்களது PayNow கணக்கிற்கான புனைப்பெயரை உள்ளிடுங்கள். உங்களது முழுப்பெயரைப் பயன்படுத்துவதைத் தவிர்த்திடுங்கள்.




பதிவைப் பூர்த்தி செய்திட, சரிபார்ப்புக்காகக் **2FA (எ.கா. குறுந்தகவல் மூலம் அனுப்பப்படும் ஒற்றைப் பயன்பாட்டு மறைச்சொல்)** அனுப்பி வைக்கப்படும்.

## படிநிலை 3 உங்கள் வங்கி செயலியுடன் PayNow QR குறியீட்டை வருடி பணம் செலுத்துங்கள்

3. நீங்கள் தேர்ந்தெடுத்த வங்கி செயலியைத் திறந்து, QR வருடியைத் தேர்ந்தெடுத்து, PayNow QR குறியீட்டைப் படமெடுங்கள்.



4. வணிகர் காட்சிக்கு வைத்திருக்கும் PayNow குறியீட்டை வருடி, வணிகரின் பெயரைச் சரிபாருங்கள்.




5. உங்கள் கைப்பேசியில் பரிவர்த்தனை தொகையை உள்ளிட்டு, வணிகரின் பெயரை உறுதி செய்த பிறகு, பணம் செலுத்துங்கள்.




6. பணம் செலுத்தப்பட்டதை உறுதி செய்யும் தகவலை நீங்கள் பெறுவீர்கள். இந்தத் தொகை உங்களது வங்கிக் கணக்கில் இருந்து உடனடியாகக் கழிக்கப்பட்டு, வணிகரின் கணக்கில் சேர்க்கப்படும்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: சிங்கப்பூர் இணையப் பாதுகாப்பு அமைப்பு)*

- உங்களது மறைச்சொல், ஒற்றைப் பயன்பாட்டு மறைச்சொல் அல்லது வேறு தனிப்பட்ட விவரங்களை யாரிடமும் அல்லது தெரியாத இணையத்தளங்களில் வெளியிடாதீர்கள்.
- உங்களது வங்கி மற்றும் தனிப்பட்ட விவரங்களை உங்களது சாதனங்களிலும் இணையத்தளங்களிலும் சேமித்து வைக்காதீர்கள். ஒரு பரிவர்த்தனையைப் பூர்த்தி செய்தவுடன் புகுபதிவிலிருந்து வெளியேறுங்கள்.
- சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக, உங்களது வங்கிப் பரிவர்த்தனைகளுக்குக் குறுந்தகவல்/மின்னஞ்சல் தகவல் எச்சரிப்புகளுக்கு ஏற்பாடு செய்து, செயிலியின் தானியக்கத் தகவல் இயக்கத்திற்கும் (in-app push notification) அனுமதி அளித்திடுங்கள்.

SG:DIGITAL
INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## SGQR பயன்பாட்டு வழிமுறைகள்




### உங்களுக்குத் தெரியுமா?

SGQR என்பது வெவ்வேறு மின் கட்டணமுறை திட்டங்களின் QR குறியீடுகளை ஒருங்கிணைக்கும் ஒற்றை QR குறியீடாகும். பயனீட்டாளர்கள் SGQR முத்திரைக்கு அடியில் பார்த்து, எந்தெந்த கட்டணமுறைகளை வணிகர் ஏற்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

## படிநிலை 1 நீங்கள் விரும்பும் கைப்பேசி கட்டணச் செயலியை உங்கள் கைப்பேசியில் நிறுவுங்கள்

**ஆப்பிள் ஆப் ஸ்டோர்** அல்லது **கூகல் பிளே ஸ்டோர்** சென்று, SGQR திட்டத்தின்கீழ் ஆதரிக்கப்படும் கட்டணமுறை செயலிகளில் ஏதாவது ஒன்றைப் பதிவிறக்கம் செய்து, அதனைச் செயற்படுத்துங்கள்.


**திட்டத்தின்கீழ் ஆதரிக்கப்படும் கட்டணமுறை செயலிகளின் எடுத்துக்காட்டுகள்**

## படிநிலை 2 SGQR குறியீட்டை வருடி பணம் செலுத்துங்கள்

1. நீங்கள் தேர்ந்தெடுத்த கட்டணமுறை செயலியின் QR குறியீட்டு வருடியைச் செயற்படுத்தி, SGQR குறியீட்டைப் படமெடுங்கள்.



2. வணிகர் காட்சிக்கு வைத்திருக்கும் SGQR குறியீட்டை வருடி, வணிகரின் பெயரைச் சரிபாருங்கள்.





3. உங்கள் கைப்பேசியில் பரிவர்த்தனை தொகையை உள்ளிட்டு, வணிகரின் பெயரை உறுதி செய்த பிறகு, பணம் செலுத்துங்கள்.





4. பணம் செலுத்தப்பட்டதை உறுதி செய்யும் தகவலை நீங்கள் பெறுவீர்கள். இந்தத் தொகை உங்களது மின்-பணப்பையில் / கணக்கில் இருந்து உடனடியாகக் கழிக்கப்பட்டு, வணிகரின் கணக்கில் சேர்க்கப்படும்.

*குறிப்பு: SGQR குறியீட்டை வருடும் முறையும் பணம் செலுத்தும் முறையும் வெவ்வேறு கட்டணமுறை செயலிகளில் மாறுபட்டிருக்கும்.*


## படிநிலை 3 பரிவர்த்தனை வரலாற்றைப் பார்வையிட்டு, தகவல்களைக் கையாளுங்கள்




5. உங்களது பரிவர்த்தனை வரலாற்றைப் பார்வையிட 'History' மீது தட்டுங்கள்.




6. தகவல்களைக் கையாள, 'More', 'Settings' மீது தட்டுங்கள்.




7. பரிவர்த்தனைகளின் எச்சரிக்கைகளையும் தகவல்களையும் கையாள 'Manage Notifications' மீது தட்டுங்கள்.

*குறிப்பு: பரிவர்த்தனை வரலாற்றைப் பார்வையிடும் முறையும் தகவல்களைக் கையாளும் முறையும் வெவ்வேறு கட்டணமுறை செயலிகளில் மாறுபட்டிருக்கும்.*

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: சிங்கப்பூர் இணையப் பாதுகாப்பு அமைப்பு)*

- உங்களது கைப்பேசி வங்கிச்சேவை அல்லது கட்டணப் பணப்பை பயன்பாட்டாளர் அடையாளப் பெயர், மறைச்சொல், ஒற்றைப் பயன்பாட்டு மறைச்சொல் (OTP) ஆகியவற்றை யாரிடமும் சொல்லாதீர்கள்.
- பணம் செலுத்துவதற்கு முன்பாக, கட்டணப் பணப்பையில் வணிகரின் பெயரும் தொகையும் சரியாக இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்துங்கள்.
- அதிகாரபூர்வ மூலங்களிலிருந்து மட்டுமே செயலிகளைப் பதிவிறக்கம் செய்யுங்கள்.

SG:DIGITAL INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## DBS டிஜிபேங்க் எஸ்ஜி செயலியின் பயன்பாட்டு வழிமுறைகள்

## உங்களுக்குத் தெரியுமா?


நீங்கள் விரைவாகவும், எளிதாகவும், பாதுகாப்பாகவும் வங்கிச் சேவைகளை மேற்கொள்ள, டிஜிபேங்க் செயலி திறமையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. உங்கள் சட்டைப்பையிலேயே வங்கியை நீங்கள் பயன்படுத்தலாம் - கணக்கிலுள்ள இருப்புத்தொகையைச் சரிபார்க்கலாம், வேறு கணக்குக்குப் பணம் மாற்றலாம், மின்-அறிக்கைகளைப் பார்வையிடலாம், சுயவிவரங்களைப் புதுப்பிக்கலாம் மற்றும் இன்னும் பலவும் செய்யலாம் - எங்கிலிருந்தும்.

## படிநிலை 1 உங்கள் கைப்பேசியில் DBS டிஜிபேங்க் செயலியை நிறுவுங்கள்


**ஆப்பிள் ஆப் ஸ்டோர்** அல்லது **கூகல் பிளே ஸ்டோர்** சென்று, **DBS டிஜிபேங்க் எஸ்ஜி** செயலியைப் பதிவிறக்கம் செய்து, செயற்படுத்துங்கள்.

1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், '**Get**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.
2. ஆண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், '**Install**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.

## படிநிலை 2 DBS டிஜிபேங்க் வங்கிச்சேவைக்குப் பதிவு செய்யுங்கள்




3. செயலியைச் செயற்படுத்தி, '**Log In**' தெரிவைத் தேர்ந்தெடுங்கள்.





4. உங்களது DBS டிஜிபேங்குக்குப் பதிவு செய்ய, '**Get Started**' மீது தட்டுங்கள்.





5. திரையில் தோன்றும் படிநிலைகளின்படி செய்து, பதிவைப் பூர்த்தி செய்யுங்கள்.

குறிப்பு: சரிபார்ப்புக்கு உங்களது DBS/POSB அட்டை எண்ணும் PIN மறை எண்ணும் தேவைப்படும்.


## படிநிலை 3 உங்களது DBS டிஜிபேங்க் செயலியை ஆராயுங்கள்




6. உங்கள் கணக்கிலுள்ள இருப்புத்தொகையை DBS டிஜிபேங்கில் சரிபாருங்கள்.




7. உங்கள் பரிவர்த்தனை வரலாற்றைச் சரிபாருங்கள்.




8. இணையம்வழி பணம் செலுத்துங்கள், பணம் மாற்றுங்கள், இன்னும் பலவும் செய்யுங்கள்!

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: உள்ளடக்கத்தை வழங்கியோர்)*

- உங்களது மறைச்சொல், ஒற்றைப் பயன்பாட்டு மறைச்சொல் அல்லது வேறு தனிப்பட்ட விவரங்களை யாரிடமும் அல்லது தெரியாத இணையத்தளங்களில் வெளியிடாதீர்கள்.
- உங்களது வங்கி மற்றும் தனிப்பட்ட விவரங்களை உங்களது சாதனங்களிலும் இணையத்தளங்களிலும் சேமித்து வைக்காதீர்கள். ஒரு பரிவர்த்தனையைப் பூர்த்தி செய்தவுடன் புகுபதிவிலிருந்து வெளியேறுங்கள்.
- சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக, உங்களது வங்கிப் பரிவர்த்தனைகளுக்குக் குறுந்தகவல்/மின்னஞ்சல் தகவல் எச்சரிப்புகளுக்கு ஏற்பாடு செய்து, செயலியின் தானியக்கத் தகவல் இயக்கத்திற்கும் (in-app push notification) அனுமதி அளித்திடுங்கள்.


SG:DIGITAL
INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## DBS PayLah! பயன்பாட்டு வழிமுறைகள்

## உங்களுக்குத் தெரியுமா?


சிங்கப்பூரின் ஆக விருப்பமான இந்தக் கட்டணச் செயலியுடன் நீங்கள் பணம் செலுத்துவதோடு இன்னும் பலவும் செய்யலாம். சில்லறை மற்றும் சேவைக் கடைகளில் 80,000-க்கும் மேலான இடங்களில் ஏற்கப்படும் PayLah! செயலியைப் பயன்படுத்தி உணவு, பொருட்கள், வாகனப் பயணங்கள், திரைப்படங்கள் மற்றும் இன்னும் பல சலுகைகளை இன்றே கண்டறியுங்கள்.


## படிநிலை 1 உங்கள் கைப்பேசியில் DBS PayLah! செயலியை நிறுவுங்கள்


**ஆப்பிள் ஆப் ஸ்டோர்** அல்லது **கூகல் பிளே ஸ்டோர்** சென்று, **DBS PayLah!** செயலியைப் பதிவிறக்கம் செய்து, செயற்படுத்துங்கள்.

1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், '**Get**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.
2. ஆண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், '**Install**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.

## படிநிலை 2 DBS PayLah! வங்கிச்சேவைக்குப் பதிவு செய்யுங்கள்






3. செயலியைச் செயற்படுத்தி, உங்களது DBS/POSB டிஜிபேங்கில் (DBS/POSB வாடிக்கையாளர்கள்) **அல்லது** MyInfo-ல் சிங்பாஸுடன் (மற்ற வங்கிகளின் பயன்பாட்டாளர்கள்) பதிவு செய்யுங்கள்.
4. DBS/POSB வாடிக்கையாளர்கள், டிஜிபேங்க் அடையாளப் பெயரையும் PIN மறை எண்ணையும் பயன்படுத்தி பதிவு செய்து தொடரலாம்.
5. மற்ற வங்கிகளின் பயன்பாட்டாளர்கள், சிங்பாஸ் அடையாளப் பெயரும் PIN மறை எண்ணும் பயன்படுத்தி அல்லது சிங்பாஸ் மொபைல் செயலியைப் பயன்படுத்தி பதிவு செய்து தொடரலாம்.

## படிநிலை 3 DBS PayLah! செயலியுடன் QR குறியீட்டை வருடி பணம் செலுத்துங்கள்













6. வணிகரின் QR குறியீட்டை வருட, முகப்புத் திரையில் '**Scan**' மீது தட்டுங்கள்.
7. வணிகரின் QR குறியீட்டை வருடுங்கள்.
8. வணிகரின் பெயரையும் கட்டண விவரங்களையும் சரிபார்த்த பிறகு தொடருங்கள்.
9. கட்டணம் செலுத்திய பிறகு, உங்கள் பரிவர்த்தனையைப் பார்வையிட '**History**' மீது தட்டுங்கள்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: உள்ளடக்கத்தை வழங்கியோர்)*

- உங்களது மறைச்சொல், ஒற்றைப் பயன்பாட்டு மறைச்சொல் அல்லது வேறு தனிப்பட்ட விவரங்களை யாரிடமும் அல்லது தெரியாத இணையத்தளங்களில் வெளியிடாதீர்கள்.
- உங்களது வங்கி மற்றும் தனிப்பட்ட விவரங்களை உங்களது சாதனங்களிலும் இணையத்தளங்களிலும் சேமித்து வைக்காதீர்கள். ஒரு பரிவர்த்தனையைப் பூர்த்தி செய்தவுடன் புகுபதிவிலிருந்து வெளியேறுங்கள்.
- சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக, உங்களது வங்கிப் பரிவர்த்தனைகளுக்குக் குறுந்தகவல்/மின்னஞ்சல் தகவல் எச்சரிப்புகளுக்கு ஏற்பாடு செய்து, செயலியின் தானியக்கத் தகவல் இயக்கத்திற்கும் (in-app push notification) அனுமதி அளித்திடுங்கள்.

SG:DIGITAL
INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## OCBC Mobile Banking செயலியின் பயன்பாட்டு வழிமுறைகள்

## உங்களுக்கு தெரியுமா?


OCBC Mobile Banking செயலியுடன் நீங்கள் எப்போது வேண்டுமானாலும் உங்கள் பணத்தைக் கையாளலாம், வங்கி விவரங்களைப் பார்வையிடலாம்.

## படிநிலை 1 உங்கள் கைப்பேசியில் OCBC Mobile Banking செயலியை நிறுவுங்கள்


**ஆப்பிள் ஆப் ஸ்டோர்** அல்லது **கூகல் பிளே ஸ்டோர்** சென்று, **OCBC Mobile Banking** செயலியைப் பதிவிறக்கம் செய்து, செயற்படுத்துங்கள்.

1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், '**Get**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.
2. ஆண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், '**Install**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.


## படிநிலை 2 உங்களது OCBC Mobile Banking செயலியின் புகுபதிவை அமைத்திடுங்கள்





3. செயலியைச் செயற்படுத்தி, '**Log In**' தெரிவைத் தேர்ந்தெடுங்கள்.




4. "**Trouble Logging in?**" மீது தட்டுங்கள்.





5. "**Get Help**" தேர்ந்தெடுங்கள்.





6. திரையில் தோன்றும் படிநிலைகளின்படி செய்து, இணைய வங்கிச்சேவைக்கான பதிவைப் பூர்த்தி செய்யுங்கள்.

குறிப்பு: சரிபார்ப்புக்கு உங்களது OCBC ATM/Debit/Credit Card அட்டை எண்ணும் PIN மறை எண்ணும் தேவைப்படும்.


## படிநிலை 3 உங்களது OCBC Mobile Banking செயலியை ஆராயுங்கள்





7. உங்கள் கணக்கிலுள்ள இருப்புத்தொகையை OCBC Mobile Banking செயலியில் சரிபாருங்கள்.




8. உங்கள் பரிவர்த்தனை வரலாற்றைச் சரிபாருங்கள்.




9. பட்டியலில் இருந்து "**Transfer**" தேர்ந்தெடுத்து பணம் அனுப்புங்கள்.




10. பட்டியலில் இருந்து "**Pay**" தேர்ந்தெடுத்து கட்டணங்களை செலுத்துங்கள்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: உள்ளடக்கத்தை வழங்கியோர்)*

- உங்களது மறைச்சொல், ஒற்றைப் பயன்பாட்டு மறைச்சொல் அல்லது வேறு தனிப்பட்ட விவரங்களை யாரிடமும் அல்லது தெரியாத இணையத்தளங்களில் வெளியிடாதீர்கள்.
- உங்களது வங்கி மற்றும் தனிப்பட்ட விவரங்களை உங்களது சாதனங்களிலும் இணையத்தளங்களிலும் சேமித்து வைக்காதீர்கள். ஒரு பரிவர்த்தனையைப் பூர்த்தி செய்தவுடன் புகுபதிவிலிருந்து வெளியேறுங்கள்.
- சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக, உங்களது வங்கிப் பரிவர்த்தனைகளுக்குக் குறுந்தகவல்/மின்னஞ்சல் தகவல் எச்சரிப்புகளுக்கு ஏற்பாடு செய்து, செயிலியின் தானியக்கத் தகவல் இயக்கத்திற்கும் (in-app push notification) அனுமதி அளித்திடுங்கள்.

SG:DIGITAL INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## OCBC Pay Anyone™ பயன்பாட்டு வழிமுறைகள்

OCBC PAY ANYONE

## உங்களுக்கு தெரியுமா?

OCBC Pay Anyone™ செயலியுடன் நீங்கள் அனைவருக்கும் பணம் செலுத்தலாம் - PayNow வைத்திருப்போரின் கைப்பேசி எண்ணைப் பயன்படுத்தியும் பணம் செலுத்தலாம். அதோடு, QR குறியீடுகளை வருடி, பங்குபெறும் ஏராளமான வணிகர்களுக்கும் நேரடியாகப் பணம் செலுத்தலாம்.


## படிநிலை 1 உங்கள் கைப்பேசியில் OCBC Pay Anyone™ செயலியை நிறுவுங்கள்

**ஆப்பிள் ஆப் ஸ்டோர்** அல்லது **கூகல் பிளே ஸ்டோர்** சென்று, **OCBC Pay Anyone™** செயலியைப் பதிவிறக்கம் செய்து, செயற்படுத்துங்கள்.


**குறிப்பு:** உங்களுக்கு OCBC Mobile Banking பயன்பாட்டுக் குறியீடும் PIN மறை எண்ணும் தேவைப்படும்.

1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், 'Get' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.
2. ஆண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், 'Install' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.


## படிநிலை 2a கைப்பேசி எண்ணை உள்ளிட்டுப் பணம் செலுத்துங்கள்




3. உங்களது வங்கிச்சேவை விவரங்களுடன் புகுபதிவு செய்யுங்கள் (பயன்பாட்டுக் குறியீடு, Pin, கைரேகை / முக அடையாளம், பொருந்துமாயின்).





4. "Pay a Person" மீது தட்டுங்கள்.



5. ஒரு தொடர்பைத் தேர்ந்தெடுத்து, நீங்கள் அனுப்ப விரும்பும் தொகையை உள்ளிடுங்கள்.




6. பணம் அனுப்பும் விவரங்களைச் சரிபார்த்த பிறகு, அம்புக்குறி மீது தட்டி உறுதிப்படுத்துங்கள்.





7. பணம் அனுப்பப்பட்டுவிட்டது!


## படிநிலை 2b OCBC Pay Anyone™ செயலியுடன் QR குறியீட்டை வருடி பணம் செலுத்துங்கள்





8. NETS QR அல்லது PayNow QR குறியீட்டை வருடி பரிவர்த்தனையைத் தொடங்குங்கள்.




9. வணிகரின் பெயர் சரியாக இருப்பதை உறுதிசெய்து, செலுத்தப்படும் தொகையை உள்ளிடுங்கள்.




10. பணம் செலுத்துவதை உறுதிப்படுத்த அம்புக்குறி மீது தட்டுங்கள்.




11. நீங்கள் பணம் செலுத்திவிட்டீர்கள்!

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: உள்ளடக்கத்தை வழங்கியோர்)*

- உங்களது மறைச்சொல், ஒற்றைப் பயன்பாட்டு மறைச்சொல் அல்லது வேறு தனிப்பட்ட விவரங்களை யாரிடமும் அல்லது தெரியாத இணையத்தளங்களில் வெளியிடாதீர்கள்.
- உங்களது வங்கி மற்றும் தனிப்பட்ட விவரங்களை உங்களது சாதனங்களிலும் இணையத்தளங்களிலும் சேமித்து வைக்காதீர்கள். ஒரு பரிவர்த்தனையைப் பூர்த்தி செய்தவுடன் புகுபதிவிலிருந்து வெளியேறுங்கள்.
- சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக, உங்களது வங்கிப் பரிவர்த்தனைகளுக்குக் குறுந்தகவல்/மின்னஞ்சல் தகவல் எச்சரிப்புகளுக்கு ஏற்பாடு செய்து, செயிலியின் தானியக்கத் தகவல் இயக்கத்திற்கும் (in-app push notification) அனுமதி அளித்திடுங்கள்.

SG:DIGITAL
INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## UOB Mighty பயன்பாட்டு வழிமுறைகள்

## உங்களுக்குத் தெரியுமா?


UOB Mighty செயலி, UOB வாடிக்கையாளர்களுக்கு அனைத்து சேவைகளையும் வழங்கும் கைப்பேசி வங்கிச்சேவை செயலியாகும். இந்தச் செயலியுடன் நீங்கள் எப்போது வேண்டுமானாலும் வங்கிக் கணக்கு விவரங்களைப் பார்வையிடலாம். அதோடு, QR கட்டணமுறைகளின் வழியாக ரொக்கமில்லாத பரிவர்த்தனைகளும் செய்யலாம் .

## படிநிலை 1 உங்கள் கைப்பேசியில் UOB Mighty செயலியை நிறுவுங்கள்


**ஆப்பிள் ஆப் ஸ்டோர்** அல்லது **கூகல் பிளே ஸ்டோர்** சென்று, **UOB Mighty Singapore** செயலியைப் பதிவிறக்கம் செய்து, செயற்படுத்துங்கள்.

1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், '**Get**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.
2. ஆண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், '**Install**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.

## படிநிலை 2 UOB இணைய வங்கிச்சேவைக்குப் பதிவு செய்யுங்கள்





3. செயலியைச் செயற்படுத்தி, '**Sign Up**' தேர்ந்தெடுங்கள்.




4. திரையில் காட்டப்படும் படிநிலைகளைப் பின்பற்றி, UOB இணைய வங்கிச் சேவைக்குப் பதிவு செய்யுங்கள்.




5. பதிவின்போது உங்களுக்குக் குறுந்தகவலில் அனுப்பி வைக்கப்படும் ஒற்றைப் பயன்பாட்டு மறைச்சொல்லை (OTP) உள்ளிடுங்கள்.





6. உங்கள் பதிவைப் பூர்த்தி செய்ய ஏடிஎம் / கடன்பற்று அட்டை / ரொக்கக்கழிவு அட்டை எண்ணையும் PIN எண்ணையும் உள்ளிடுங்கள்.

**குறிப்பு:** சரிபார்ப்புக்கு உங்களது UOB அட்டை எண்ணும் PIN எண்ணும் தேவைப்படும்.

## படிநிலை 3 UOB Mighty செயலியுடன் QR குறியீட்டை வருடி பணம் செலுத்துங்கள்





7. உங்களது UOB Mighty செயலியைச் செயற்படுத்தி புகுபதிவு செய்யுங்கள்.




8. செயலியில் உள்ள QR குறியீடு வருடியைப் பயன்படுத்தி SGQR குறியீட்டை வருட "QR PAY" மீது தட்டுங்கள்.




9. வணிகர் காட்சிக்கு வைத்திருக்கும் SGQR குறியீட்டை வருடி, வணிகரின் பெயரைச் சரிபாருங்கள்.




10. பரிவர்த்தனை தொகையை உள்ளிட்டு, வணிகரின் பெயரை உறுதிப்படுத்திய பிறகு பணம் செலுத்துங்கள்.

நீங்கள் செலுத்தும் பணம் உங்கள் கணக்கிலிருந்து கழிக்கப்பட்டு, வணிகரின் கணக்கில் நேரடியாகச் சேர்க்கப்படும்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: உள்ளடக்கத்தை வழங்கியோர்)*

- உங்களது மறைச்சொல், ஒற்றைப் பயன்பாட்டு மறைச்சொல் அல்லது வேறு தனிப்பட்ட விவரங்களை யாரிடமும் அல்லது தெரியாத இணையத்தளங்களில் வெளியிடாதீர்கள்.
- உங்களது வங்கி மற்றும் தனிப்பட்ட விவரங்களை உங்களது சாதனங்களிலும் இணையத்தளங்களிலும் சேமித்து வைக்காதீர்கள். ஒரு பரிவர்த்தனையைப் பூர்த்தி செய்தவுடன் புகுபதிவிலிருந்து வெளியேறுங்கள்.
- சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக, உங்களது வங்கிப் பரிவர்த்தனைகளுக்குக் குறுந்தகவல்/மின்னஞ்சல் தகவல் எச்சரிப்புகளுக்கு ஏற்பாடு செய்து, செயலியின் தானியக்கத் தகவல் இயக்கத்திற்கும் (in-app push notification) அனுமதி அளித்திடுங்கள்.

# SG Digital

## Singtel Dash பயன்பாட்டு வழிமுறைகள்

## உங்களுக்குத் தெரியுமா?


Singtel Dash என்பது உங்களது அனைத்து வகைக் கட்டண, வாழ்க்கைப்பாணித் தேவைகளுக்கும் பயன்படும் கைப்பேசிப் பணப்பையாகும். நீங்கள் உள்ளூரில் அல்லது வெளியூரில், கடையில் அல்லது இணையத்தில், பாதுகாப்பாகவும் எளிதாகவும் பணம் செலுத்தலாம். உங்கள் கைப்பேசி கொண்டு பொருள் வாங்கவும், உணவுண்ணவும், பயணம் செய்யவும், பணம் அனுப்பவும் Dash-ஐப் பதிவிறக்கம் செய்யுங்கள்.

## படிநிலை 1 உங்கள் கைப்பேசியில் Singtel Dash செயலியை நிறுவுங்கள்

**ஆப்பிள் ஆப் ஸ்டோர்** அல்லது **கூகல் பிளே ஸ்டோர்** சென்று, **Singtel Dash** செயலியைப் பதிவிறக்கம் செய்யுங்கள்.

1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், ‘**Get**’ மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.
2. ஆண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், ‘**Install**’ மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.

## படிநிலை 2 Singtel Dash சேவைக்குப் பதிவு செய்யுங்கள்




பதிவு செய்வதற்கு உங்களது Singtel Dash செயலியை இயக்கி, ‘**Sign Up**’ மீது தட்டுங்கள்.


**3 எளிய படிநிலைகளுடன் பதிவைப் பூர்த்தி செய்யுங்கள்:**




3. படிவத்தில் தேவையான விவரங்களை நிரப்புங்கள்.




4. உங்களது 6-இலக்க PIN எண்ணை அமைத்திடுங்கள். தொடர் வரிசை எண்களை (123456) அல்லது அதே எண்களைப் (333333) பயன்படுத்தாதீர்கள்.





5. மீதி விவரங்களைப் பூர்த்தி செய்து, பரிந்துரை / சலுகைக் குறியீட்டை (இருந்தால்) உள்ளிடுங்கள்.


## படிநிலை 3 Singtel Dash ஐப் பயன்படுத்திப் பணம் செலுத்த, பணம் நிரப்பி, QR குறியீட்டை ஒளிவருடுங்கள்





6. உங்களது Singtel Dash கணக்கில் பணம் நிரப்ப, முகப்புத் திரையில் ‘Top-Up’ தேர்ந்தெடுங்கள்.




7. நீங்கள் விரும்பும் பணம் நிரப்பல் முறைகளைத்* தேர்ந்தெடுத்து, பணம் நிரப்பலுக்கான படிநிலைகளின்படி செய்யுங்கள்.




8. QR குறியீட்டை ஒளிவருடிப் பணம் செலுத்துவதற்கு, முகப்புத் திரையிலுள்ள இளஞ்சிவப்பு பொத்தான் மீது தட்டுங்கள்.




9. வணிகரின் பெயரையும் பரிவர்த்தனை தொகையையும் சரிபார்த்த பிறகு பணம் செலுத்துங்கள்.

*மற்ற பணம் நிரப்பல் முறைகளில் உங்கள் வங்கிக்கணக்கு மூலமான eNETS, 7-லெவென், AXS உள்ளடங்கும். மேல்விவரம் அறிய dash.com.sg பாருங்கள்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: உள்ளடக்கத்தை வழங்கியோர்)*

- அனுமதியற்ற பயன்பாட்டைத் தடுக்க, உங்கள் சாதனத்தில் வலுவான மறைச்சொல்லைப் பயன்படுத்துங்கள்.
- உங்களது PIN எண்ணை அல்லது OTP மறைச்சொல்லை யாரிடமும் வெளியிடாதீர்கள்.
- பழக்கமில்லாத அல்லது சந்தேகத்திற்குரிய இணையத்தளங்களில் தனிப்பட்ட, நிதி அல்லது கடன்பற்று அட்டை விவரங்களை வெளியிடாதீர்கள்.

SG:DIGITAL

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## GrabPay செயலியின் பயன்பாட்டு வழிமுறைகள்

GrabPay

## உங்களுக்குத் தெரியுமா?

GrabPay கடன்பற்று/ரொக்கக்கழிவு அட்டைகள், PayPal போன்ற துணை பணப்பை சேவைகள், GrabPay போன்ற ரொக்கமற்ற கட்டணமுறைகளை ஆதரிக்கிறது. உங்கள் பயணங்களுக்கும், உணவு விநியோகங்களுக்கும், இணையம்வழியும் கடைகளிலும் பொருள் வாங்குவதற்கும் இன்னும் பலவற்றுக்கும் எளிமையான முறையில் பணம் செலுத்தலாம்!

## படிநிலை 1 உங்கள் கைப்பேசியில் Grab செயலியை நிறுவுங்கள்

**ஆப்பிள் ஆப் ஸ்டோர்** அல்லது **கூகல் பிளே ஸ்டோர்** சென்று, **Grab செயலியைப்** பதிவிறக்கம் செய்து, செயற்படுத்துங்கள்.


1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், 'Get' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.
2. ஆண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், 'Install' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.

## படிநிலை 2 GrabPay சேவைக்குப் பதிவு செய்யுங்கள்





3. உங்கள் கைப்பேசி எண்ணையும் மின்னஞ்சல் முகவரியையும் நிரப்பி, Grab கணக்குக்குப் பதிவு செய்யுங்கள்.


கணக்கைச் செயற்படுத்த, உங்கள் கைப்பேசி எண்ணுக்கு 6-இலக்கக் குறியீடு அனுப்பி வைக்கப்படும்.




4. அடிப்பகுதியிலுள்ள வரிசையில் 'Payment' மீது தட்டி, MyInfo மூலமாக சிங்பாஸ் பயன்படுத்தி அல்லது ஒரு படிவத்தைப் பூர்த்தி செய்து உங்கள் அடையாளத்தை **உறுதிப்படுத்துங்கள்**.





5. உங்களது கடன்பற்று / ரொக்கக்கழிவு அட்டையைச் சேர்க்க, by tapping on 'Payment' மீதும் பிறகு '**Add a Card**' மீதும் தட்டுங்கள். உங்கள் அட்டை விவரங்களை உள்ளிட்டு, 'Save' மீது தட்டுங்கள்.




6. உங்களது அட்டையைப் பயன்படுத்தி GrabPay Wallet பணப்பையில் பணம் நிரப்ப, ஒரு தொகையைத் தேர்ந்தெடுங்கள். நீங்கள் Paynow சேவையையும் பயன்படுத்தலாம்.


## படிநிலை 3 GrabPay-உடன் QR குறியீட்டை வருடி பணம் செலுத்துங்கள்




7. இடதுபக்க மேல்முனையில் உள்ள "scan QR" விசைமீது தட்டி, **GrabPay பயன்படுத்தி கடைகளில் பணம் செலுத்துங்கள்**. நீங்கள் வாகனப் பயணத்திற்குப் பதிவு செய்வதற்கும் அல்லது உணவு ஆர்டர் செய்வதற்கும் இதைப் பயன்படுத்தலாம்.




8. வணிகரின் QR குறியீட்டை **வருடி**, பரிவர்த்தனை தொகையை உள்ளிடுங்கள்.




9. வணிகரின் பெயரையும் பரிவர்த்தனை தொகையையும் கைப்பேசியில் **சரிபார்த்த** பிறகு, கட்டணம் செலுத்துங்கள்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: உள்ளடக்கத்தை வழங்கியோர்)*

- மேலும் பாதுகாப்பான முறையில் பணம் செலுத்த, 6-இலக்க GrabPay PIN மறை எண்ணை அமைத்திடுங்கள்.
- உங்களது OTP மறைச்சொல், மறைச்சொல் அல்லது வேறு தனிப்பட்ட விவரங்களை யாரிடமும் அல்லது அறிமுகமில்லாத இணையத்தளங்களில் வெளியிடாதீர்கள்.
- தயவுசெய்து Grab எனச் சொல்லிக்கொள்ளும் மூன்றாம் தரப்பு இணையத்தளங்களில் அல்லது செயலிகளில் எந்தவொரு தனிப்பட்ட விவரத்தையும் வெளியிடாதீர்கள். சரிபார்ப்பு நோக்கத்திற்குத் தேவைப்படும் விவரங்கள் அனைத்தும் Grab செயலியில் மட்டுமே கோரப்படும்.

SG:DIGITAL

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## GrabFood பயன்பாட்டு வழிமுறைகள்

GrabFood

## உங்களுக்குத் தெரியுமா?


நீங்கள் செயலி மூலம் உணவு வாங்கும்போது சொந்தமாகக் கடைக்குச் சென்று எடுத்துக் கொள்ளலாம் அல்லது வீட்டுக்கு அனுப்பி வைக்கச் சொல்லலாம்! சில உணவகங்களில் சொந்தமாகக் கடையிலிருந்து எடுத்துக் கொள்வோருக்குத் தள்ளுபடிகள் வழங்குகின்றன. வேறு சில உணவகங்கள், நீங்கள் ஆர்டர் செய்யும்போது தள்ளுபடிகள் வழங்குகின்றன அல்லது இலவசமாக வீட்டுக்கு அனுப்பி வைக்கின்றன!


## படிநிலை 1 Grab செயலியை உங்கள் கைப்பேசியில் நிறுவுங்கள்


**ஆப்பிள் ஆப் ஸ்டோருக்கு** அல்லது **கூகல் பிளே ஸ்டோருக்குச்** சென்று, **Grab செயலியைப்** பதிவிறக்கம் செய்து, செயல்படுத்துங்கள்.

1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், 'Get' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கம் செய்யலாம்.
2. ஆண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், 'Install' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கம் செய்யலாம்.

## படிநிலை 2 Grab சேவைக்குப் பதிவு செய்யுங்கள்














3. 'New to Grab? Sign up!' மீது தட்டி, ஒரு கணக்கை உருவாக்கிக் கொள்ளுங்கள்.
4. உங்கள் கைப்பேசி எண்ணை நிரப்புங்கள். உங்கள் கணக்கைச் செயல்படுத்த, உங்கள் கைப்பேசி எண்ணுக்கு 6-இலக்கக் குறியீடு அனுப்பி வைக்கப்படும்.
5. உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட 6-இலக்க சரிபார்ப்புக் குறியீட்டை உள்ளிடுங்கள்.

## படிநிலை 3 Grab செயலியில் தேடல் செய்து, உங்களுக்குப் பிடித்த உணவுகளை / பொருட்களைக் கூடையில் சேருங்கள்




6. உங்கள் வட்டாரத்திலுள்ள உணவகங்களைப் பார்வையிட 'Food' மீது தட்டுங்கள்.
7. செயலியில் உள்ள பட்டியலிலிருந்து உங்களுக்குப் பிடித்த உணவகத்தின் பெயர் மீது தட்டுங்கள்.
8. உணவைத் தேர்ந்தெடுத்து, 'Add to Basket' மீது தட்டுங்கள்.
9. உங்களது விநியோக முகவரியையும் மொத்த தொகையையும் சரிபார்த்த பிறகு ஆர்டர் செய்யுங்கள். 'Place Order' மீது தட்டி உறுதிப்படுத்துங்கள்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள்

- கட்டணங்களை மேலும் பாதுகாப்பான முறையில் செலுத்த, 6-இலக்க GrabPay மறை எண்ணை அமைத்திடுங்கள்.
- ஒருமுறை பயன்படுத்தும் மறைச்சொல், கடவுச்சொல் அல்லது வேறு தனிப்பட்ட விவரங்கள் எதனையும் எவரிடமும் அல்லது அறிமுகமில்லாத இணையத்தளங்களில் ஒருபோதும் வெளியிடாதீர்கள்.
- மூன்றாம் தரப்பு இணையத்தளங்களிடம் அல்லது Grab என்று சொல்லிக்கொள்ளும் செயலிகளிடம் தனிப்பட்ட விவரங்கள் எதனையும் கொடுக்காதீர்கள். சரிபார்க்கும் நோக்கத்திற்குத் தேவைப்படும் விவரங்கள் அனைத்தும் Grab செயலியிலேயே கோரப்படும்.


SG:DIGITAL
INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## WhyQ பயன்பாட்டு வழிமுறை

WhyQ

## உங்களுக்குத் தெரியுமா?


WhyQ செயலியுடன் நாடெங்கிலும் உள்ள உணவங்காடிக் கடைகளிலிருந்து பல்வேறு உணவு வகைகளை நீங்கள் ஆர்டர் செய்து, குறைவான செலவில் வீட்டுக்கு அனுப்பி வைக்கும் சேவையைப் பெறலாம்! WhyQ தினந்தோறும் வழங்கும் சலுகைகளுடன் மலிவான உணவு வகைகளை உண்டு மகிழுங்கள்.

## படிநிலை 1 உங்கள் கைப்பேசியில் WhyQ செயலியை நிறுவுங்கள்


**ஆப்பிள் ஆப் ஸ்டோருக்கு** அல்லது **கூகல் பிளே ஸ்டோருக்குச்** சென்று, **WhyQ செயலியைப்** பதிவிறக்கம் செய்து, செயல்படுத்துங்கள்.

1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், 'Get' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கம் செய்யலாம்.
2. ஆண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், 'Install' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கம் செய்யலாம்.


## படிநிலை 2 WhyQ சேவைக்குப் பதிவு செய்யுங்கள்




3. 'Sign Up' மீது தட்டி, ஒரு கணக்கை உருவாக்கிக் கொள்ளுங்கள்.





4. தேவையான விவரங்களை நிரப்புங்கள் அல்லது உங்களது ஃபேஸ்புக் கணக்கைப் பயன்படுத்தி பதிவு செய்யுங்கள்.





5. பதிவு செய்தவுடன் குறுந்தகவல்வழி உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் 6-இலக்க OTP மறைச்சொல்லை உள்ளிடுங்கள்


## படிநிலை 3 WhyQ செயலியில் தேடல் செய்து, உங்களுக்குப் பிடித்த உணவுகளை / பொருட்களைக் கூடையில் சேருங்கள்





6. உங்களுக்கு அருகில், நாடெங்கிலும் உள்ள உணவு நிலையங்களைப் பார்வையிட, அல்லது மொத்தமாக ஆர்டர் செய்ய, ஆர்டர் வகையைத் தேர்ந்தெடுங்கள்.





7. உங்களுக்குப் பிடித்த உணவு நிலையத்தின் மீது தட்டி, உணவுக் கடை ஒன்றைத் தேர்ந்தெடுங்கள்.




8. உணவை அனுப்பி வைப்பதற்கான தேதியையும் நேரத்தையும் தேர்ந்தெடுங்கள்.




9. நீங்கள் விருப்பப்படும் உணவைத் தேர்ந்தெடுத்து, 'Add to Cart' மீது தட்டுங்கள்.




10. 'Cart' மீது தட்டிவிட்டு, உறுதி செய்தவுடன் 'Proceed to Payment' மீது தட்டுங்கள்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள்

- அனுமதியில்லாத அணுகலைத் தடுக்க, உங்களது WhyQ கணக்கிற்கு வலுவான கடவுச்சொல்லைப் பயன்படுத்துங்கள்.
- உங்களது கடவுச்சொல் அல்லது ஒருமுறை பயன்படுத்தும் மறைச்சொல் விவரங்கள் எதனையும் எவரிடமும் அல்லது அறிமுகமில்லாத இணையத்தளங்களில் ஒருபோதும் வெளியிடாதீர்கள்.
- அறிமுகமில்லாத இணையத்தளங்களிடம் அல்லது WhyQ என்று சொல்லிக்கொள்ளும் செயலிகளிடம் தனிப்பட்ட விவரங்கள் எதனையும் கொடுக்காதீர்கள்.

SG:DIGITAL

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## ஃபேர்பிரைஸ் வருடிச் செல்க சேவையின் பயன்பாட்டு வழிமுறைகள்

scan&go
Shop Easy, Pay Fast

## உங்களுக்குத் தெரியுமா?


FairPrice Scan & Go வாடிக்கையாளர்களில் கிட்டத்தட்ட பாதி பேர் மூத்த குடிமக்கள்! FairPrice Scan & Go உடன், மூத்தோர்கள் வரிசையில் நிற்பதைத் தவிர்க்கலாம். அதோடு முன்னோடி, மெர்டேக்கா, மூத்த குடிமக்கள் ஆகியோருக்கான தள்ளுபடிகளையும் பயன்படுத்தலாம்!

## படிநிலை 1 உங்கள் கைப்பேசியில் ஃபேர்பிரைஸ் செயலியை நிறுவுங்கள்


**ஆப்பிள் ஆப் ஸ்டோர்** அல்லது **கூகல் பிளே ஸ்டோர்** சென்று, **ஃபேர்பிரைஸ்** செயலியைப் பதிவிறக்கம் செய்து, செயற்படுத்துங்கள்.

1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், '**Get**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.
2. ஆண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், '**Install**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.


## படிநிலை 2 உங்கள் கணக்கை அமைத்திடுங்கள்




3. ஒரு கணக்கைத் தொடங்க, "More", மற்றும் "Account" தேர்ந்தெடுத்து, உங்களது மின்னஞ்சல் முகவரி, கைப்பேசி எண், மறைச்சொல் ஆகியவற்றை உள்ளிட்டு பதிவு செய்யுங்கள்.





4. உங்கள் பொருட்களுக்கு எளிதில் பணம் செலுத்த, உங்களது கட்டண விவரங்களை அமைத்திடுங்கள்.




5. நீங்கள் தள்ளுபடிகளும் இதர சலுகைகளும் பெற, உங்களது **PLUS! கணக்கையும்** இணைக்கலாம். அதோடு ஃபேர்பிரைஸின் அனைத்து அதிர்ஷ்டக் குலுக்கல்களிலும் பங்குபெற "**Lucky Draw**" பெட்டியில் குறியிடலாம்.

## படிநிலை 3 வருடிக்கொண்டே சென்று பொருட்களை வாங்குங்கள்!




6. ஃபேர்பிரைஸ் செயலியைச் செயற்படுத்துங்கள் Scan & Go சின்னத்தின்மீது தட்டி, ஜிபிஎஸ் இடமறியலை அனுமதித்து உட்பதிவு செய்யுங்கள்.




7. வாங்கிக்கொண்டே செல்லுங்கள் நீங்கள் வாங்க விரும்பும் பொருட்களின் பட்டைக் குறியீட்டை வருடி, செயலியில் பணம் செலுத்துங்கள்.




8. பூர்த்தி செய்யுங்கள் நீங்கள் வாங்கிய பொருட்களையும் மின்-ரசீதையும் ஃபேர்பிரைஸ் வருடிச் செல்க (Scan & Go) சாதனத்தில் சரிபார்த்து கொள்முதலைப் பூர்த்தி செய்யுங்கள்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: உள்ளடக்கத்தை வழங்கியோர்)*

- உங்களது இணைய ஃபேர்பிரைஸ் கணக்குக்கு, குறைந்தது 12 வெவ்வேறு வகையான எண்ணெழுத்துகளுடன் வலுவான மறைச்சொல்லை உருவாக்குங்கள் (அதாவது, UPPERCASE, lowercase, 1234, !@#$).
- உங்களது ஒற்றைப் பயன்பாட்டு மறைச்சொல், மறைச்சொல் அல்லது மற்ற தனிப்பட்ட விவரங்களை யாரிடமும் அல்லது தெரியாத இணையத்தளங்களில் ஒருபோதும் வெளியிடாதீர்கள்.
- கடன்பற்று / ரொக்கக்கழிவு அட்டைக் கட்டண மோசடிகளை உங்கள் வங்கியிடம் தெரியப்படுத்தி, உடனடியாக உங்கள் அட்டையை ரத்து செய்யுங்கள்.

SG:DIGITAL
IMDA INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## Carousell தொடக்கக் கையேடு

## உங்களுக்குத் தெரியுமா?


Carousell நீங்கள் வாங்க அல்லது வாடகைக்கு ஒரு குடியிருப்பு அல்லது வணிக அலகு தேட உதவுகிறது!


## படிநிலை 1 Carousell செயலியை உங்கள் கைப்பேசியில் நிறுவுங்கள்


**Apple App Store** அல்லது **Google Play Store** சென்று, **Carousell** பதிவிறக்கம் செய்து, செயல்படுத்துங்கள்.


1. iOS பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்க '**Get**' என்பதைத் தட்டுங்கள்.
2. Android பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்க '**Install**' என்பதைத் தட்டுங்கள்.

## படிநிலை 2 Carousell கட்டணமுறைக்குப் பதிவு செய்யுங்கள்





3. ஒரு கணக்கை உருவாக்க '**Sign up for an account**' மீது தட்டுங்கள்.


4. பயன்பாட்டுப் **பெயரும் கடவுச்சொல்லும்** உருவாக்கி, நீங்கள் வசிக்கும் **நகரையும் மின்னஞ்சல் முகவரியையும்** நிரப்புங்கள்.


5. '**I'm just browsing**' மீது தட்டுங்கள்.


6. குறைந்தது மூன்று விருப்பமான பிரிவுகளைத் தேர்ந்தெடுத்து, '**Done**' மீது தட்டுங்கள்.

## படிநிலை 3 Carousell இல் தேடி உங்களுக்கு பிடித்த பொருட்களை வாங்கவும்




7. நீங்கள் விரும்பும் பொருளைத் தேட, '**Search Carousell**' கட்டத்தில் குறிப்புச் சொற்களை நிரப்புங்கள்.

8. தேடலின் முடிவுகளைப் பார்வையிட்டு, உங்களைக் கவரும் பொருளைத் தேர்ந்தெடுங்கள்.

9. பொருளைத் தேர்ந்தெடுத்தவுடன், அதன் விளக்கத்தையும் விலையையும் நீங்கள் படித்துப் பார்க்கலாம். பொருளைப் பற்றி மேல்விவரம் கேட்டறிய, '**Chat**' மீது தட்டுங்கள்.

10. உங்களுக்கு ஒரு பொருள்மீது ஆர்வம் இருந்தால், அதற்கு நீங்கள் தர விரும்பும் விலையைக் குறிப்பிட '**Make offer**' மீது தட்டுங்கள். அந்த விலை ஏற்கப்பட்டால், விற்பனையாளர் பரிவர்த்தனை முறையை உங்களுடன் ஏற்பாடு செய்வார்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: சிங்கப்பூர் இணையப் பாதுகாப்பு அமைப்பு / GoSafeOnline)*

- பொது Wi-Fi இணைப்பைப் பயன்படுத்தாதீர்கள். பாதுகாப்பான இணையத்தளங்களையே பயன்படுத்துங்கள், எ.கா. https://...
- போலி இணையத்தளங்களிடமும் உண்மையென நம்ப முடியாத அளவுக்கு அருமையான சலுகைகள் குறித்தும் எச்சரிக்கையாக இருங்கள்.
- விளம்பரம் செய்யப்பட்ட பொருளைப் பார்த்து, திருப்தி அடைந்த பிறகு பணம் கட்டுங்கள்.

# SG Digital

## Fave தொடக்கக் கையேடு

### உங்களுக்குத் தெரியுமா?


சிங்கப்பூர் முழுவதும் 14,000க்கும் மேற்பட்ட ஃபேவ்பே (FavePay) பங்காளிகளிடம் ரொக்கமில்லா கட்டணம் செலுத்தி, ஒவ்வொரு முறையும் 20% ரொக்கம் திரும்பப் பெறுங்கள்!

## படிநிலை 1 Fave செயலியை உங்கள் கைப்பேசியில் நிறுவுங்கள்


Apple App Store அல்லது Google Play Store சென்று, Fave பதிவிறக்கம் செய்து, செயல்படுத்துங்கள்.

1. iOS பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்க 'Get' என்பதைத் தட்டுங்கள்.
2. Android பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்க 'Install' என்பதைத் தட்டுங்கள்.


## படிநிலை 2 Fave கட்டணமுறைக்குப் பதிவு செய்யுங்கள்





3. தெரிவுகளில் ஒன்றின்மீது தட்டி உங்களது தற்போதைய சமூக ஊடகக் கணக்கை Fave-உடன் இணைத்திடுங்கள், அல்லது உங்கள் தொலைபேசி எண்ணைப் பயன்படுத்தி பதிவு செய்யுங்கள்.





4. திரையின் கீழ்ப்பகுதிக்குச் சென்று, 'சிங்கப்பூரை' உங்கள் நகரமாகத் தட்டி தேர்ந்தெடுங்கள்.




5. தொலைபேசி எண்ணைப் பயன்படுத்த, உங்கள் தொலைபேசி எண்ணை நிரப்பி, 'Next' மீது தட்டுங்கள். உங்கள் தொலைபேசி எண்ணுக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் மறைச்சொல்லை நிரப்பி, 'Continue' மீது தட்டுங்கள்.





6. உங்கள் பெயரையும் மின்னஞ்சல் முகவரியையும் நிரப்பி, 'Continue' மீது தட்டுங்கள்.





7. விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் படித்துப்பார்த்து ஏற்றுக்கொள்ள 'Accept and continue' மீது தட்டுங்கள்.


## படிநிலை 3 Fave-உடன் FavePay QR குறியீட்டை வருடி கட்டணம் செலுத்துங்கள்





8. 'வருடி பணம் செலுத்து' சின்னத்தின்மீது தட்டுங்கள்.





9. முகப்பில் உள்ள தனித்துவமான QR குறியீட்டை வருடுங்கள்.




10. தொகையை உள்ளிட்டு, 'Payment method' மீது தட்டுங்கள்.




11. பணம் செலுத்த நீங்கள் பயன்படுத்த விரும்பும் அட்டைகள்மீது தட்டுங்கள் அல்லது GrabPay மீது தட்டுங்கள்.




12. நீங்கள் செலுத்த விரும்பும் தொகையை உள்ளிட்டு, 'Continue to Payment' மீது தட்டி பணம் செலுத்துங்கள்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: சிங்கப்பூர் இணையப் பாதுகாப்பு அமைப்பு / GoSafeOnline)*

- உங்களது ஒருமுறை பயன்படுத்தும் மறைச்சொல்லை யாரிடமும் அல்லது அறிமுகமில்லாத இணையத்தளங்களில் ஒருபோதும் வெளியிடக்கூடாது.
- தனிப்பட்ட, நிதி அல்லது கடன்பற்று அட்டை விவரங்களை அதிகம் அறியப்படாத அல்லது சந்தேகத்திற்குரிய இணையத்தளங்களில் வெளியிடாதீர்கள்.
- பணம் செலுத்துவதற்குமுன், வணிகரின் பெயரும் தொகையும் சரியாக இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள கட்டண விவரங்களை சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

# SG Digital

## meREWARDS தொடக்கக் கையேடு

## உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் பொருள் வாங்கும்போதோ, உணவு உண்ணும்போதோ அல்லது பயணம் செய்யும்போதோ, எங்கேயும் எப்போதும் meREWARDS செயலியைப் பயன்படுத்தலாம். உங்களுக்காக உருவாக்கப்பட்ட எங்கள் பிரத்தியேக சலுகைக் குறியீடுகள் மற்றும் 1-க்கு -1 உணவுப் பற்றுச்சீட்டுகளைப் பெற்றிடுங்கள்.

## படிநிலை 1 meREWARDS செயலியை உங்கள் கைப்பேசியில் நிறுவுங்கள்


**Apple App Store**, **Google Play Store** அல்லது **HUAWEI AppGallery**-க்குச் சென்று, **meREWARDS** செயலியைப் பதிவிறக்குங்கள் மற்றும் நிறுவுங்கள்.

1. iOS பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்க '**Get**' என்பதைத் தட்டுங்கள்.
2. Android அல்லது HUAWEI பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்க '**Install**' என்பதைத் தட்டுங்கள்.


## படிநிலை 2 ஒரு meCONNECT கணக்கிற்குப் பதிவு செய்யுங்கள்

மீடியாகார்ப்பின் அனைத்து மின்னிலக்கச் சேவைகளிலும், **ஒரே meCONNECT கணக்கை** நீங்கள் பயன்படுத்தலாம்.


மாறாக, உங்கள் Apple, Facebook அல்லது Google கணக்கைப் பயன்படுத்தி உள்நுழையுங்கள்.




3. மேல் இடதுபுறத்தில் உள்ள சின்னத்தைத் தட்டி உள்நுழையுங்கள்.





4. உங்கள் meREWARDS -ஐ அணுக, 'meCONNECT உடன் உள்நுழைக' அல்லது 'meCONNECT கணக்கை உருவாக்குக' என்பதைத் தட்டவும்.





5. பணம் மீளப்பெறல் மற்றும் 'உணவக முன்பதிவு' சேவைகளை செயலி வழி அனுபவியுங்கள்.


## படிநிலை 3 1-க்கு -1 உணவகச் சலுகைகள் & கூப்பன்களை அனுபவிக்கத் தொடங்குங்கள்





6. பிரதான பக்கத்தில் இருந்து 'கூப்பன்கள்' என்பதைத் தட்டவும்.





7. நீங்கள் மீட்க விரும்பும் கூப்பனைத் தேர்ந்தெடுக்கவும்.




8. செயலியின் வழி மீட்பதற்கான சலுகைக் குறியீட்டை வெளிப்படுத்த, '**கூப்பன் குறியீட்டைப் பெறுக**' என்பதைத் தட்டவும்.




9. சில வணிகர்களிடமிருந்து மீட்டெடுக்க, நீங்கள் 4-இலக்க வணிகக் குறியீட்டை உள்ளிட வேண்டும்.




10. செயலியிலிருந்து 1-க்கு-1 உணவுப் பற்றுச்சீட்டுகளையும் நீங்கள் மீட்டெடுக்கலாம்!

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(மீடியாகார்ப் வழங்கும் தகவல்)*

- உங்கள் உள்நுழைவு விவரங்களை மற்றவர்களுக்கு **வெளியிட வேண்டாம்**, ஏனெனில் அது உங்கள் கணக்குகள் மற்றும் தனிப்பட்ட தகவல்களுக்கு அங்கீகரிக்கப்படாத அணுகலுக்கு வழிவகுக்கும்.
- அங்கீகரிக்கப்படாத பயன்பாட்டைத் தடுக்க, **வலுவான கடவுச்சொல்லை** உங்கள் சாதனத்தில் பயன்படுத்துங்கள்.
- உங்கள் இணையக் கணக்கு ஊடுருவப்படும் அபாயத்தைக் குறைக்க, உங்கள் கடவுச்சொல்லை **அடிக்கடி மாற்றுங்கள்**.

SG:DIGITAL

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## உங்களது தனிப்பட்ட விவரங்களைப் பாதுகாப்பதற்கான பயன்பாட்டு வழிமுறை

PERSONAL DATA PROTECTION COMMISSION SINGAPORE

## உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் இணையம்வழி செய்யும் ஒவ்வொரு பரிவர்த்தனையிலும் பரிமாற்றத்திலும் உங்களது தனிப்பட்ட விவரங்களைப் பகிர்ந்து கொள்கிறீர்கள். எனவே, உங்களது தனிப்பட்ட விவரங்கள் கவனமாகக் கையாளப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான வழிமுறைகளை நீங்கள் அறிந்திருப்பது அவசியம். உங்களது விவரங்களைப் பொறுப்புடன் கையாள இந்தக் குறிப்புகள் உங்களுக்கு உதவியாக இருக்கும்.

## படிநிலை 1 பொறுப்பான அமைப்புகளுடன் பரிவர்த்தனை செய்யுங்கள்


DATA PROTECTION ASSURED

உங்களது தனிப்பட்ட விவரங்கள் பத்திரமாக வைத்திருக்கப்படும் என நீங்கள் நம்பக்கூடிய அமைப்புகளுடன் மட்டும் பரிவர்த்தனை செய்யுங்கள்.

தகவல் பாதுகாப்பு நம்பகத்தன்மை முத்திரை (DPTM) உள்ள அமைப்புகளை நாடி, உங்களது தனிப்பட்ட விவரங்கள் பாதுகாப்பாக இருக்கும் என்ற மனநிம்மதியை நீங்கள் அடையலாம். DPTM சான்றுபெற்ற அமைப்புகளில், உங்களது தனிப்பட்ட விவரங்களைச் சிறந்த முறையில் பாதுகாப்பதற்கான தகவல் பாதுகாப்பு நடைமுறைகள் உள்ளன.

மேலும் அறிய **https://go.gov.sg/dptm**.

## படிநிலை 2 விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் முழுமையாகப் படித்துப் பாருங்கள்




இணையத்ததளங்கள் தனிப்பட்ட விவரங்களைச் சேகரிக்கின்றனவா என்ற விவரத்தையும், அதற்கான காரணத்தையும் தங்களது தகவல் பாதுகாப்பு அல்லது அந்தரங்கக் கொள்கையில் தெரிவிக்கவேண்டும். மொபைல் செயலிகளும் இதேபோன்ற தகவலை வழங்குகின்றன. அதோடு, செயலியை நீங்கள் பதிவிறக்கம் செய்வதற்குமுன் உங்களது ஒப்புதலை அவை பெறவேண்டும்.

உங்களிடமிருந்து என்னென்ன விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன, அவை எவ்வாறு கையாளப்படுகின்றன என்பதை நன்கு புரிந்துகொள்ள, விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் முழுமையாகப் படித்துப் பாருங்கள்.

## படிநிலை 3 உங்களது விவரங்களைப் பாதுகாக்க உடனடியாகவும் விரைவாகவும் செயல்படுங்கள்



தரவு மீறல் நேர்ந்து, அதனால் உங்களுக்கு ஏதாவது ஆபத்து அல்லது தீங்கு நேருமானால், அமைப்புகள் உங்களிடம் தெரியப்படுத்த வேண்டும். இந்நிலையில், உங்களது தனிப்பட்ட விவரங்களைப் பாதுகாக்க அமைப்பு அளிக்கும் ஆலோசனைகளை நீங்கள் பின்பற்றவேண்டும். எடுத்துக்காட்டாக, அறியப்படாத கட்டணங்களிலிருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்ள, உங்களது மறைச்சொற்களை மாற்றலாம், அல்லது உங்களது வங்கியுடன் அல்லது நிதி அமைப்புடன் தொடர்புகொள்ளலாம்.

*நன்றி: தனிநபர் தகவல் பாதுகாப்பு ஆணையம்*

SG:DIGITAL

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

# SG Digital

## இணையத்தில் பாதுகாப்பாக இருப்பதற்கான வழிமுறைகள்



## உங்களுக்குத் தெரியுமா?

நாம் எவ்வாறு வீட்டிற்குள் கொள்ளையர்கள் நுழையாதிருக்க கதவைப் பூட்டி வைக்கிறோமோ அதேபோல், இணையப் பரிவர்த்தனைகள் செய்யும்போது நமது சாதனங்களையும் தகவல்களையும் பாதுகாப்பாக வைத்திருக்க கற்றுக்கொள்ள வேண்டும். நீங்கள் இணையத்தில் பாதுகாப்பாக இருக்க உதவும் குறிப்புகள் இவை.

### 1 ஆன்டிவைரஸ் (வைரஸ் தடுப்பு) மென்பொருளைப் பயன்படுத்தி, அதைத் தவறாமல் புதுப்பித்துக்கொண்டே இருங்கள்




ஆன்டிவைரஸ் மென்பொருள் ஆபத்தான வைரஸ்களை ஸ்கேன் செய்து, பாதுகாப்பற்ற இணையத்தளங்களைத் தடை செய்திடும். போலியான ஆன்டிவைரஸ் செயலிகள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள். அதிகாரபூர்வ ஆப் ஸ்டோர்களின் செயலிகளை மட்டுமே நிறுவுங்கள்.




மென்பொருளைப் புதுப்பித்துக்கொண்டே இருப்பது உங்கள் கணினியையும் சாதனங்களையும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களிலிருந்து காத்திடும். தானாகவே புதுப்பித்துக்கொள்ளும் வசதி இருந்தால், அதைச் செயல்படுத்தி வைத்திருங்கள்.

### 2 உங்களது தனிப்பட்ட விவரங்களைக் கவனமாகப் பகிர்ந்து கொள்ளுங்கள்





உங்களது தனிப்பட்ட விவரங்களை இணையத்தில் பகிர்ந்து கொள்ளும்போது, எப்போதுமே

a) உங்கள் விவரம் எதற்காகக் கேட்கப்படுகிறது என்பதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள்; அதோடு

b) விவரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு முன்பாக, அது அவசியம்தானா என யோசித்துப் பாருங்கள்.

உங்களிடம் கேட்கப்படும் விவரங்கள் ஏன் அவசியம் என்பது உங்களுக்கு உறுதியாகத் தெரியாவிட்டால், உங்களது விவரங்களைக் கேட்ட அமைப்பிடம் விளக்கம் கேட்டு, உங்கள் விவரங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.


### 3 ஃபிஷ்ஷிங் அறிகுறிகளைக் கண்டுகொள்ளுங்கள்




ஃபிஷ்ஷிங் என்பது உங்களை ஏமாற்றி உங்களது தனிப்பட்ட அல்லது நிதித் தகவல்களைத் தெரிவிக்க வைப்பதற்கு மோசடிக்காரர்கள் பயன்படுத்தும் ஓர் உத்தி. உங்களது புகுபதிவு விவரங்கள், வங்கிக் கணக்கு மற்றும் கடன்பற்று அட்டை எண்கள் போன்றவற்றை மோசடிக்காரர்கள் பெற முயல்வார்கள்.

போலி இணையத்தளங்கள், அரசாங்கம் அல்லது சேவை நிறுவனங்கள் அனுப்பியதுபோல பாசாங்கு செய்யும் மின்னஞ்சல்கள் அல்லது தொலைபேசி தகவல்கள் ஆகியவற்றிடம் எச்சரிக்கையாக இருங்கள். தவறாக வழிகாட்டும் தகவல்களைக் கவனித்திடுங்கள். கவர்ச்சியான வெகுமதிகள் கிடைக்கும் என ஆசைகாட்டி உங்களது இரகசிய விவரங்களை அவசரமாகவும் எதிர்பாராமலும் கேட்கும் கோரிக்கைகளிடம் கவனமாக இருங்கள். சரிபார்க்காத தொடர்புச் சுட்டிகளை (லிங்க்) அல்லது இணைப்புகளைத் திறக்கவோ பதிவிறக்கவோ கூடாது.

### 4 வலுவான மறைச்சொற்களைப் பயன்படுத்துவதோடு, 2FA-வையும் செயல்படுத்துங்கள்




உங்களால் ஞாபகம் வைத்திருக்கக்கூடிய “5 வெவ்வேறு சொற்களைப்” பயன்படுத்தி, நீளமான, தொடர்பில்லாத மறைச்சொற்களை உருவாக்குங்கள் (எ.கா. IhadKAYAtoastAT8am).

உங்களது மறைச்சொல்லையும் ஒற்றைப் பயன்பாட்டு மறைச்சொல்லையும் (OTP) யாரிடமும் அல்லது தெரியாத இணையத்தளங்களில் வெளியிடவேண்டாம்.

வசதி இருந்தால், கூடுதல் சரிபார்ப்புக்காக இரட்டை மறைச்சொல் முறையை (2FA) செயல்படுத்துங்கள்.

உங்கள் மறைச்சொல் வலிமையானதா என்பதைச் சரிபார்க்க https://go.gov.sg/csa-pwchecker இணையத்தளத்திற்குச் செல்லுங்கள் அல்லது இந்த QR குறியீட்டை வருடுங்கள்.

### 5 பகிர்வதற்கு முன் சரிபார்க்கவும்




போலிச் செய்திகளின் பரவலைத் தடுத்திடுங்கள்.

- மூலம் எதுவென்று ஆராயுங்கள்
- தகவல் உண்மைதானா எனச் சரிபாருங்கள்
- உண்மைதானா என்பதை உறுதிப்படுத்துவதற்கான தளங்களைப் பயன்படுத்துங்கள். எ.கா. Factcheck.org மற்றும் www.gov.sg/Factually (சிங்கப்பூர் தொடர்பான செய்திகளுக்கு)


*நன்றி: சிங்கப்பூர் இணையப் பாதுகாப்பு அமைப்பு, ஊடக எழுத்தறிவு மன்றம் மற்றும் தனிநபர் தகவல் பாதுகாப்பு ஆணையம்.*



SG:DIGITAL INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

#StaySafeGoDigital

# மோசடியை எப்படி கண்டுபிடிப்பது?

## மோசடியின் அறிகுறிகள்



### 01. உடனடியாகப் பணம் அனுப்பவேண்டும்

- பணத்தை உடனடியாக அனுப்பாவிட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என அழைப்பவர் மிரட்டுவார்.

### 02. தனிப்பட்ட விவரங்கள் கேட்கப்படும்

- அழைப்பவர் தான் ஓர் அரசாங்க அதிகாரி அல்லது சட்டபூர்வ வர்த்தகத்தின் பிரதிநிதி என அடையாளம் காட்டிக் கொள்வார். நீங்கள் குற்றம் ஏதும் செய்யவில்லை என நிரூபிப்பதற்கான விசாரணைக்கு உங்களது வங்கி விவரங்கள், அடையாள அட்டை எண் போன்ற தனிப்பட்ட விவரங்கள் தேவைப்படுவதாகக் கேட்பார்.

### 03. மற்றவர்களிடம் சொல்லக்கூடாது

- இந்த விஷயத்தை இரகசியமாக வைத்திருக்கும்படி நீங்கள் எச்சரிக்கப்படுவீர்கள்.

### 04. "+" குறியீடு முன்னிணைப்பு

- உள்ளூர் தொலைபேசி எண் போன்றதோர் எண்ணில் "+" குறியீடு முன்னிணைப்பாக இருந்தால், அது பெரும்பாலும் போலி எண்ணிலிருந்து வரும் அழைப்பாக இருக்கும். உள்வரும் அனைத்துல அழைப்புகளுக்கு மட்டுமே "+" குறியீடு முன்னிணைப்பாகக் காட்டப்படும். உள்ளூர் அழைப்புகளுக்கு "+" முன்னிணைப்பு இருக்காது.

| +9123 4567 mobile | 9123 4567 mobile | +6955 0221 mobile | +4241 2345 mobile |
|---|---|---|---|
| போலி எண்ணிலிருந்து வரும் அழைப்பு | உள்ளூர் எண்ணிலிருந்து வரும் அழைப்பு | போலி எண்ணிலிருந்து வரும் அழைப்பு | வெளிநாட்டிலிருந்து / போலி எண்ணிலிருந்து வரும் அழைப்பு (எதிர்பார்க்காததாக இருந்தால்) |


## பொதுவான மோசடிகள்

### மின்-வணிக மோசடி




மோசடிக்காரர்கள் குறைவான விலைகளில் பொருட்களை விற்பனைக்கு வழங்கி, பணத்தை முன்கூட்டியே தருமாறு உங்களிடம் கேட்பார்கள்.

### சமூக ஊடகத்தில் ஆள்மாறாட்ட மோசடி



மோசடிக்காரர்கள் உங்களது தனிப்பட்ட விவரங்களைப் பெறுவதற்காக, ஊடுருவப்பட்ட / போலி சமூக ஊடகக் கணக்குகளைப் பயன்படுத்தி உங்களது குடும்ப உறுப்பினர்களாக அல்லது நண்பர்களாகப் பாசாங்கு செய்வார்கள்.

### கடன் மோசடி




மோசடிக்காரர்கள் உரிமம்பெற்ற வட்டிக்கடையின் ஊழியராகப் பாசாங்கு செய்து, கடன் சேவைகள் வழக்குவதாகக் குறுந்தகவல் அல்லது வாட்ஸ்ஆப் தகவல் அனுப்புவார்கள்.

## நீங்கள் செய்ய வேண்டியவை:




**01.** உங்களுக்கு உறுதியாக இல்லாவிட்டால், NCPC மோசடித் தடுப்பு நேரடித் தொலைபேசி சேவையை **1800-722-6688** என்ற எண்ணில் அழைக்கவும் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை, திங்கள் முதல் வெள்ளி வரை) அல்லது hotline@ncpc.org.sg முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

**02.** தனிப்பட்ட விவரங்களையும் ஒற்றைப் பயன்பாட்டு மறைச்சொற்களையும் (OTPs) ஒருபோதும் தொலைபேசிவழி வெளியிடவேண்டாம். **எப்போதும் அமைப்பின் மத்திய நேரடித் தொலைபேசி சேவையை அழைத்து உறுதிப்படுத்திக் கொள்ளவும்.** சந்தேகத்திற்குரிய அழைப்பில் தரப்படும் தொடர்பு எண் மூலமாக அல்ல.

**03.** "+" முன்னிணைப்பைக் காட்டும் எதிர்பார்க்காத அழைப்புகள், உள்வரும் அனைத்துலக அழைப்பாக இருக்கும். இத்தகைய அழைப்புகளுக்குப் பதிலளிக்கும்போது **கூடுதல் கவனமாக இருக்கவும்.**

சிங்கப்பூர் காவல்துறை, சிங்கப்பூர் இணையப் பாதுகாப்பு அமைப்பு ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் தயாரிக்கப்பட்டது

**SDO நேரடித் தொலைபேசி எண்: 6377 3800**

SG:DIGITAL OFFICE

# குறிப்பு

SG:DIGITAL

MAKING CONNECTIONS THAT MATTER

# குறிப்பு

SG :DIGITAL

MAKING CONNECTIONS THAT MATTER

# குறிப்பு

SG:DIGITAL

MAKING CONNECTIONS THAT MATTER

# நீங்கள் கற்றுக்கொள்ள எப்போதுமே புதிய மின்னிலக்கத் திறன் ஏதாவது இருக்கும்!

உங்களது மின்னிலக்கத் திறன் மேம்பாட்டை வாழ்நாள் கற்றல் பயணமாக்குங்கள்! இந்த வளங்களைப் பயன்படுத்தி உங்களது திறன்களைத் தொடர்ந்து மேம்படுத்திக் கொள்ளுங்கள்.



go.gov.sg/dp

## மின்னிலக்க இணையக் கூட்டரங்கு

ஒவ்வொரு வாரமும் உங்களுக்குப் புதியதொரு திறனைக் கற்றுத்தர இணையம்வழி பல்வேறு வகையான இருவழித்தொடர்பு வகுப்புகள் நடத்தப்படுகின்றன.



go.gov.sg/cybersecuritytip

## இணையப்பாதுகாப்பு குறிப்புகள்

நீங்கள் இணையத்தைப் பயன்படுத்த கற்றுக்கொண்டு விட்டீர்கள். இனி, இணையத்தில் எப்படி பாதுகாப்பாக இருப்பது என்பதைக் கற்றுக்கொள்ளுங்கள்.



go.gov.sg/SeniorsLJ

## கற்றல் பயணங்கள்

உங்களது அன்றாட வாழ்க்கையை மேம்படுத்த உதவும் பற்பல மின்னிலக்கச் செயலிகளைப் பயன்படுத்த கற்றுக்கொள்ளுங்கள்.



go.gov.sg/LearnDigital

## கற்றல் திட்டங்கள்

அத்தியாவசிய மின்னிலக்கத் திறன்களை வகுப்பறையில் கற்பிக்கும் சிறப்புத் திட்டங்கள் தீவெங்கிலும் நடத்தப்படுகின்றன! மேல்விவரம் அறிய குறியீட்டை வருடுங்கள்.